## DEPOSITION OF WITNESS

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.21/2023**
**Prosecution Witness**:12

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. அன்புராஜ் (PW 12 ) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd **day of November 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused absent petition U.s. 317 Cr.P.C is filed and allowed)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது சிவகிரி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.01.2023ம் தேதி நான் சிவகிரி காவல்நிலையத்தில் தலைமை காவலராக இருந்தபோது, சிவகிரி காவல்நிலைய குற்ற எண்.69/2023 ச/பி.279, 304(எ) இதச ன் படி வழக்கில் கொடுமுடி வட்ட காவல் ஆய்வாளர் அவர்களின் உத்தரவின் பேரில் இறந்துபோன முத்துவீரன் என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக கொடுமுடி அரசு மருத்துவரிடம் ஆஜர் செய்து, பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை அவர்களது உறவினர்களிடம் அடக்கம் செய்ய ஒப்படைத்தேன். பின்பு நிலையம் வந்து கொடுமுடி வட்ட காவல் ஆய்வாளர் அவர்களிடம் அறிக்கை செய்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அரசு தரப்பு சான்று ஆவணமாக குறியீடு செய்ய கோரப்பட்டது. அ.த.சா.ஆ. ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்பு வாதியின் புகாரையும் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.11.03 08:31:30 +0530

வைத்தேன். அதன் மற்றைய நகல்களை சம்மந்தபட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். நான் வழக்கு பதிவு செய்தது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

எதிரி ஆஜரில் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.11.03 08:31:34 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.21/2023**
**Prosecution Witness**:13

| Name | திரு. அருள்சாமி (PW 13 ) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd **day of November 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused absent petition U.s. 317 Cr.P.C is filed and allowed)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது வெள்ளோடு காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.04.2023ம் தேதி நான் சிவகிரி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக நான் பணியில் இருந்தபோது, அன்று மாலை 16.30 மணிக்கு சிவகிரி கருக்கம்பாளையத்தை சேர்ந்த முத்துவீரன் மனைவி பழனியம்மாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று சிவகிரி காவல்நிலைய குற்ற எண்.69/2023 ச/பி.279, 304(A) இதச ன் படி வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகாரையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அதன் மற்றொரு நகலை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் மேல்விசாரணைக்காக வழக்கு கோப்பினை கொடுமுடி வட்ட காவல் ஆய்வாளர் திரு.ஆனந்த் அவர்கள் வசம் ஒப்படைத்தேன். நான் வழக்கு பதிவு செய்தது சம்பந்தமாக காவல் ஆய்வளார் என்னைவிசாரித்தார்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.11.03 08:31:40 +0530

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் பெறப்படவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.11.03 08:31:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.